**பிப்ரவரி - 14**

**"உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்." - மத் 12 : 37**

நம்முடைய எல்லா வார்த்தைகளும் நமது இருதயத்தைக் காண்பிக்கிற ஒரு சாதனமாக (சுட்டுக்கோலாக) கர்த்தரால் கருதப்படுகிறது. நமது வார்த்தைகள் கலகமுள்ளவைகளாகவோ அல்லது துரோகமுள்ளவைகளாகவோ அல்லது அற்பமானவைகளாகவோ அல்லது மரியாதையற்றவைகளாகவோ அல்லது இரக்கமற்றவைகளாகவோ, நன்றியில்லாதவைகளாகவோ, பரிசுத்தமில்லாதவைகளாகவோ அல்லது அசுத்தமானவைகளாகவோ இருந்தால், "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" என்ற தத்துவத்தின் அடிப்படையில் இருதயம் அதற்கேற்றவாறு நியாயந்தீர்க்கப்படுகின்றது. அபூர்ண ஜீவிகளாக இருக்கிற நாம், எப்பொழுதும் வார்த்தையிலும் கிரியையிலும் பூரணராக இருக்கலாம் என்பது கூடாத காரியம். நம்மிடம் மிகவும் நல்ல முயற்சிகள் இருப்பினும் சில சமயங்களில் வார்த்தைகளின் மேலும், வழிகளின் மேலும் நமக்கிருக்க வேண்டிய (ஆளும் அடக்கும்) திறமைதான் விழிப்புள்ள உண்மையுள்ள முயற்சியின் மூலமாக நாடித்தேடப்பட வேண்டிய காரியம். **- Z ’96, 32 (R 1937).**

மாய்மாலக்காரனைத் தவிர, மற்றவர்களுக்கு அவர்களுடைய எண்ணங்களுக்கெல்லாம், வார்த்தைகள் தான் காண்பிக்கும் சாதனம் (சுட்டுக்கோல்) தவறான அபிப்பிராயங்கள் அறிவிக்கும் தீங்காய்ப் பேசப்படுகிற வார்த்தைகள் நேர்மையான இருதயத்தை உடையவர்களுடைய கண்டனத்திற்கு நியாயமாக பாத்திரமாகின்றன. அதுபோல தவறான அபிப்பிராயங்களை அறிவிக்கும் சரியாகப் பேசப்படுகிற வார்த்தைகளை யார் சரியாக நிதானிக்கிறார்களோ அவர்களுடைய ஒப்புதலைப் பெறுகிறது. நம்முடைய இதயங்களும் மனதும் சரியாக இருக்குமானால், நமது வார்த்தைகள் சரியானவைகளாக இருக்க வேண்டும். நமது இருதயங்களும் மனதும் தவறானவைகளாக இருக்குமானால், நமது வார்த்தைகள் தவறானவைகளாக இருக்கும். **- P ’35, 15.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

மத் 12:22-37; சங் 10:7,8; 12:3,4; 34:13; 41:5-9; 50:23; 52:2 -4; 64:2-5;77:12; 102:8; 119:13,27,46,54,172; 145:5-7,11,12; 140:3,11; நீதி 10:11, 19-21,31,32; 12:5,6, 13,17-19; 15:1,4,28; 18:8,21,23; 26:20-23,28; மத் 5:22,37; எபே 4:25; யாக் 1:26; 3:5-10;

**கோபுர வாசிப்பு : Z ’14, 166 (R 5470)**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் என் வார்த்தைகள் எந்த வகையைச் சேர்ந்ததாக இருந்தன? எப்படி? ஏன்? எந்தச் சந்தர்ப்பங்களில்? என்ன பலனோடு பேசப்பட்டன?